## மேல் மாகாண மாகாண சபை – சபைக் கூட்டம்
**2017 யூன் மாதம் 06 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

**I.** தவிசாளரின் அறிவிப்புக்கள்

**II.** அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்

**III.** செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

**IV.** மனுக்கள்

**V.** கேள்விகள்

**01.** **கௌரவ நிரோஷா அத்துகோரல உறுப்பினரினால் கௌரவ விவசாய, காணி, நீர்ப்பாசனம், கடற்றொழில், விலங்குற்பத்தி சுகாதாராம் அத்துடன் கமநல அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு: (Îæ/vi (1)17/46)**

அ. அம்பேபுஸ்ச விதை உற்பத்தி பண்ணையில் தற்போது கடமையாற்றும் சேவகர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஆ. மாதாந்தம் எவ்வளவு வருமானம் உழைக்கப்படுகின்றது ?

இ. அதன் மாதாந்தச் செலவு எவ்வளவு ?

ஈ. பண்ணையின் பூமிப் பிரதேசம் எவ்வளவு ?

உ. பயிரிடப் பட்டுள்ள பூமிப் பிரதேசம் எவ்வளவு ?

**02.** **கௌரவ சுனில் ஜயமினி சபாநாயகரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு: (Îæ/vi (1)17/47)**

அ. 2013 ஆண்டில் மேல் மாகாணத்தின் வீதிகள் மற்றும் உள்ளூராட்சி வீதிகளின் அபிவிருத்திக்காக மத்திய அரசின் ஊடாக எவ்வளவு நிதி வழங்கப்பட்டுள்ளது ?

ஆ. 2014 ஆண்டில் மேல் மாகாணத்தின் வீதிகள் மற்றும் உள்ளூராட்சி வீதிகளின் அபிவிருத்திக்காக மத்திய அரசின் ஊடாக எவ்வளவு நிதி வழங்கப்பட்டுள்ளது ?

இ. 2015 ஆண்டில் மேல் மாகாணத்தின் வீதிகள் மற்றும் உள்ளூராட்சி வீதிகளின் அபிவிருத்திக்காக மத்திய அரசின் ஊடாக எவ்வளவு நிதி வழங்கப்பட்டுள்ளது ?

ஈ. 2016 ஆண்டில் மேல் மாகாணத்தின் வீதிகள் மற்றும் உள்ளூராட்சி வீதிகளின் அபிவிருத்திக்காக மத்திய அரசின் ஊடாக எவ்வளவு நிதி வழங்கப்பட்டுள்ளது ?

உ. இவ் வேளையில் தற்போதைய அரசு நிதி ஏற்பாட்டினை ஒழுங்காக வீதி அபிவிருத்திக்கு வழங்கவில்லையாயின் அந் நிதியினைப் பெற நீங்கள் ஏதாவது வேலைத் திட்டத்தினை தயாரித்து உள்ளீர்களா ?

ஊ. இல்லையாயின் ஏன் ?

**03.** **கௌரவ சுனில் ஜயமினி சபாநாயகரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு : (Îæ/vi (1)17/48)**

அ. 1988 இல் முதலாவது மாகாண சபை உறுப்பினர்களுக்காக ஐக்கிய தேசியக் கட்சியின் கீழ் ஜே.ஆர். ஜயவர்தன அவர்கள் அறவிட்டுக் கொள்ளும் அடிப்படையில் மாதாந்தம் ரூபா 1200/- படியினை கழித்துக் கொண்டு மிட்சுபிசி பஜிரோ வண்டி ஒன்று வழங்கி இருந்தார் என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. இரண்டாம் மற்றும் மூன்றாம் மாகாண சபைகளுக்காக பொது ஜன ஐக்கிய முன்னணி அரசின் கீழ் கௌரவ சந்திரிகா குமாரதுங்க அவர்கள் 75% மான வரித் தீர்வையின் கீழ் மாகாண சபை உறுப்பினர்களுக்கு வாகனம் ஒன்றினை இறக்குமதி செய்ய அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்கினார் என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. நான்காவது மற்றும் ஐந்தாவது மாகாண சபைகளுக்காக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் கீழ் கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் இறக்குமதித் தீர்வையின் கீழ் வாகனம் ஒன்றினைக் கொள்வனவு செய்ய அனுமதிப் பத்திரம் ஒன்றினை வழங்கினார் என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா ?

ஈ. ஆறாவது மாகாண சபையில் புதிய உறுப்பினர்கள் பலர் உள்ளதுடன் காணப்பட்ட எல்லா அரசுகளும் மாகாண சபை உறுப்பினர்களுக்கு இந்த வாகன அனுமதிப் பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ள படியால் தற்போதைய அரசுடன் நற்புறவுடன் செயற்படும் நீங்கள் இந்த அனுமதிப் பத்திரத்தினை உறுப்பினர்களுக்கு பெற்றுக் கொடுக்க கௌரவ ஜனாதிபதி மற்றும் கௌரவ பிரதம மந்திரியுடன் கலந்துரையாடி அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பீர்களா ?

உ. இல்லையாயின் ஏன் ?

**04.** **கௌரவ சுனில் ஜயமினி சபாநாயகரினால் கௌரவ சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை, மகளிர் விவகாரம் அத்துடன் சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :**
**(Îæ/vi (1)17/49)**

அ. காணப்படும் நிதி நிலைமையின் கீழ் 03 குழுக்களாக மாகாண சபை உறுப்பினர்களை வெளிநாட்டு கற்கை நெறிச் சுற்றுலாவுக்காக அனுப்ப சபைச் செயலாளர் நடவடிக்கை எடுத்தார் என்பதனை அறிவீர்களா ?

ஆ. அதன் கீழ் 2016.08.10 ஆந் திகதி 34 உறுப்பினர்களும் 04 அலுவலர்களும் ரசியா மற்றும் பின்லாந்து சுற்றுலாவில் ஈடுபட்டுள்ளார் என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. மிகுதி இரண்டாவது உறுப்பினர் குழுவை கற்கை நெறி சுற்றுலாவிற்காக அனுப்புவதற்கு 2017 மாகாண வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நிதி அங்கீகரிக்கப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஈ. அவ்வாறு இருக்கும் போது 2017 ஆம் ஆண்டில் 05 மாதங்கள் சென்று உள்ள போதும் இரண்டாம் குழுவினை அனுப்ப இது வரை மாகாண சபை நடவடிக்கை எடுக்கவில்லை என்பதனை அறிவீர்களா ?

உ. வெளிநாடு சென்ற முதலாவது உறுப்பினர் குழாம் வெளிநாட்டு கற்கைநெறி சுற்றுலா மூலம் பாரிய அறிவினைப் பெற்று உள்ளதனால் இரண்டாம் மற்றும் மூன்றாம் சுற்றுலாக்களுக்காக அனுப்ப இருந்த உறுப்பினர்களுக்கு அச் சந்தர்ப்பம் கிடைக்காததினால் பாரிய மனத்தாக்கத்திற்கு உட்பட்டு உள்ளார் என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஊ. ஏற்றுக் கொள்ளவில்லையாயின் அது ஏன் ?

எ. இரண்டாவது கற்கை நெறிச் சுற்றுலாவுக்காக உறுப்பினர் குழுவினை அனுப்ப நடவடிக்கை எடுப்பீர்களா ?

ஏ. அதற்காக ஏதாவது சட்ட ரீதியிலான பிரச்சினை ஒன்று தோன்றியுள்ளதா ?

ஐ. இல்லையாயின் ஏன் ?

**05.** **கௌரவ சரத் பதிரண உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)17/50)**

அ. மேல் மாகாண சபையின் மூலம் நடைமுறைப் படுத்தப்படும் மேல் மாகாண சபையின் பொருளாதார மேம்பாட்டு பணிமனை என பெயர் குறிப்பிடப்படும் தாபனம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு உள்ளதா ?

ஆ. வருடாந்த நிதி கூற்றின் மூலம் அந்தத் தாபனத்திற்காக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டு உள்ளதா ? அது எந்த செலவுத் தலைப்பின் கீழ் ?

இ. இந்தப் பொருளாதார மேம்பாட்டு பணிமனை மூலம் இது வரை நடைமுறைப் படுத்தி உள்ள செயற்றிட்டங்களின் எண்ணிக்கையை உரிய வருடத்திற்கு இணங்க செயற்றிட்டங்களின் பெயருடன் வெவ்வேறாக குறிப்பிட முடியுமா ?

ஈ. அந்தச் செயற்றிட்டங்களால் கிடைக்கப் பெற்ற நட்டம் அல்லது இலாபத்தை ஒவ்வொரு செயற்றிட்டத்திற்கும் இணங்க வெவ்வேறாக இச் சபைக்கு சமர்பிக்க முடியுமா ?

உ. இந்த பொருளாதார மேம்பாட்டு பணிமனை தொடர்பாக உள்ளக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டதா ? அது எப்போது ?

ஊ. அந்த விசாரணை அறிக்கையின் படி நிகழ்ந்து உள்ளன எனக் குறிப்பிடும் முறைகேடுகள் தொடர்பாக நீங்கள் எடுத்துள்ள மற்றும் எதிர்காலத்தில் எடுக்கும் நடவடிக்கை யாது ?

**06.** **கௌரவ கே.டி. அறுணதீபால் உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)17/51)**

அ. மேல் மாகாணத்தினுள் நொத்தாரிசுமாரினால் எழுதிக் கையொப்பம் இடப்பட்ட உறுதி / ஆதனத்திற்காக உரிய முத்திரைக் கட்டணம் செலுத்தப்படாத நொத்தாரிசுமார் எத்தனை பேர் உள்ளனர் ? அவர்களின் பெயர் முகவரி மற்றும் இரண்டாம் பிரதி ஒப்படைக்கப்படும் காரியாலயம் என்ற ரீதியில் வெவ்வேறாக யார் ?

ஆ. ஒவ்வொருவரிடமிருந்தும் அறவிடப் பட வேண்டிய நிலுவை முத்திரைக் கட்டணம் மற்றும் தண்டப் பணம் வெவ்வேறாக எவ்வளவு ? மொத்த நிதி அளவு எவ்வளவு ? அறவிடப்பட்டுள்ள நிதி எவ்வளவு ?

இ. அவ்வாறானவர்கள் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது ?

ஈ. அவர்களில் எவர்களுக்கு வழக்குத் தொடரப்பட்டுள்ளது ? எந்த நீதி மன்றப் பிரதேசத்தில் ?

உ. இவர்களினால் மீறப்பட்டு உள்ள தொழில் ரீதியான ஒழுக்கச் செயற்பாடு தொடர்பாக ஏதாவது தாபனம் ஒன்றில் / நீதிமன்றம் ஒன்றில் முறைப்பாடு செய்யப்பட்டு உள்ளதா ? அது எவர்கள் தொடர்பாக ?

ஊ. மேலே கூறப்பட்ட (உ) இற்கு இணங்க செயற்படவில்லையாயின் அது எக் காரணத்தினால் ?

எ. இந்த மோசடியைத் தவிர்ப்பதற்காக மாகாண இறைவரித் திணைக்களம் இவ்வேளையில் எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

**07.** **கௌரவ லலித் எல்லாவல உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)17/52)**

அ. 2014 ஆம் ஆண்டில் எனது தனிப்பட்ட நிதி ஏற்பாட்டின் கீழ் ஹொரண கல்வி வலய பாடசாலைப் பிள்ளைகளின் உபயோகத்திற்காக சிங்கள / தமிழ் / ஆங்கில அகராதி அச்சுப்பதிப்புச் செய்யப்பட்டு உள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. அந்த அகராதியில் பிள்ளைகளின் மனதில் வரலாறு தொடர்பான அறிவை மேம்படுத்தும் நோக்கில் இலங்கையின் தேசிய ஒருமைப்பாட்டிற்காக பங்களிப்பினை வழங்கிய வரலாற்று மிக்க வீரர்கள் 12 பேரின் புகைப்படங்கள் மாகாண வரலாற்றுடன் அச்சுப் பதிப்புச் செய்யப்பட்டு இருந்தது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. அப் புத்தங்கள் தயாரிக்கப்பட்டு ஹொரணை வலைய பணிப்பாளரினால் சிபாரிசுடன் வலையக் காரியாலயத்தின் மூலம் கேள்வியினைக் கோரி அச்சுப் பதிப்புக்கு வழங்கப்பட்டு இருந்தது என்பதனை அறிவீர்களா ?

ஈ. அப்படியாயின் அந்தப் புத்தகங்களை அச்சுப் பதிப்பு செய்த பின் பகிர்ந்தளிக்கும் போது ஹொரண வலையக் காரியாலயத்தின் மூலம் அந்தப் புத்தகத்தின் இறுதி பக்கத்தில் அச்சிடப்பட்டிருந்த வரலாற்று மிக்க வீரர்களின் புகைப்படங்கள் அகற்றப்பட்டு உள்ளன என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

உ. அப்படியாயின் இது எவரின் கட்டளை அல்லது எவரது ஆலோசனையின் படி ?

ஊ. அவ்வாறான மாற்றம் ஒன்றினை மேற்கொள்வதற்கு வலைய கல்விப் பணிப்பாளருக்கு உள்ள இயலுமை யாது ?

எ. இதற்காக நீங்கள் எடுக்கும் எதிர்கால நடவடிக்கை யாது ?

**08.** **கௌரவ ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)17/53)**

அ. கட்டான பிரதேச செயலாளர் பிரிவினுள் மஹ்ஹுனுப்பிட்டியில் அமைந்துள்ள அவேந்திரா ஹோட்டலின் கட்டட வரைபடம் கட்டான பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்பட்டு உள்ளதா ?

ஆ. அவ் வரைபடத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டால் அவ் வரைபடத் திட்டத்தின் பிரதி ஒன்றினை சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ?

இ. அவ் வரைபடத் திட்டம் எவ் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது ?

ஈ. இந்த அவ்வேந்திரா ஹோட்டலினால் பொது மக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் சேவையினைப் பெற்றுக் கொள்ளுகின்றனர் என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

உ. இந்த ஹோட்டலைக் கட்டிய போது அக் கட்டடத்திற்குப் பின்னால் நீர்வழிந்தோடுவதற்காக காணப்பட்ட பொது கால்வாய் வழியை மூடுவது நிகழ்ந்துள்ளதா ?

ஊ. இந்த ஹோட்டலின் கட்டட வரைபடம் அங்கீகரிக்கப்படவில்லையாயின் அதனை உடைத்து அகற்ற அல்லது சரியான தரத்தில் கட்ட நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா ?

எ. வெள்ளவத்தையில் விழா மண்டபம் ஒன்று தரமின்றி நிர்மாணிக்கப்பட்டு உயிர் இளப்பு ஏற்பட்டு உடைந்து விழுந்ததைப் போல் பொது மக்களுக்கு சேவை வழங்கும் மேல் மாகாண சபையின் எல்லையினுள் உள்ள அங்கீகாரம் அற்ற கட்டடம் ஒன்றினை அகற்ற அல்லது சரியான தரத்தில் கட்டடத்தை நிர்மாணிக்க நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா ?

ஏ. இல்லையாயின் ஏன் ?

**09.** **கௌரவ ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு:** **(Îæ/vi (1)17/54)**

அ. கம்பஹா மாவட்டத்தினுள் தனியார் பஸ் வண்டிகளின் பயணத்திற்கு உரிய வீதிகளுக்காக புதிதாக பஸ் வண்டிகளை பயணத்தில் ஈடுபடுத்துவதற்கு எத்தனை சந்தர்ப்பங்களில் கேள்வி கோரப்பட்டது ?

ஆ. அது எந்த பயண இலக்கத்தைக் கொண்ட வீதிகளுக்காக ? அந்த கேள்விக்கு இணங்க முன்வைத்துள்ள நபர்களின் அல்லது தாபனங்களின் பெயர் மற்றும் விலைப் பட்டியலை வெவ்வேறாக குறிப்பிட முடியுமா ?

இ. அந்த கேள்வி எத்தனை வருடங்களுக்கு செல்லுபடியானதாகும் ?

ஈ. அந்த கேள்வி சபையின் உறுப்பினர்களின் பெயர் மற்றும் பதவிகள் என்ன ?

உ. பஸ் வண்டிகளின் எண்ணிக்கை அதிகமானதன் காரணமாக நாள் ஒன்றில் ஏதாவது பஸ் வண்டிகள் பயணத்தில் இருந்து அகற்றப்பட்டு உள்ளனவா ?

ஊ. மேலதிகமான பஸ்கள் காணப்படும் வீதிகளுக்காக மீண்டும் கேள்வியினைக் கோரி பஸ்வண்டிகளை ஈடுபடுத்துவது சட்டரீதியானதா ?

எ. வீதிகளுக்காக பஸ் வண்டியினை ஈடுபடுத்த நீதி மன்றக் கட்டளையில் ஏதாவது தரம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளதா ?

ஏ. இந்த கேள்வி அழைப்பின் போது மறைமுகமாக கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்று உள்ளதா ?

ஐ. இவ்வாறு கேள்வி கோரப் பட்ட பஸ் வண்டிகள் இவ் வேளையில் பயணத்தில் ஈடுபடுகின்றனவா ?

ஒ. இல்லையாயின் ஏன் ?

**10.** **கௌரவ ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, சுூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு: (Îæ/vi (1)17/55)**

அ. போக்குவரத்து அதிகார சபையின் ஜா-எல பிரதேச செயலாளர் காரியாலயத்தில் எத்தனை பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன ?

ஆ. அவை எப்போதிருந்து ?

இ. அவற்றுக்காக பதில் கடமையாற்ற நியமிக்கப்பட்ட நபர்களின் பெயர் மற்றும் பதவிகள் என்ன ?

ஈ. அப் பதில் கடமைகளுக்காக ஒவ்வொருவருக்கும் மேலதிகமாக செலுத்தப்படும் படியை வெவ்வேறாக குறிப்பிட முடியுமா ?

உ. இவ் வெற்றிடங்களை நிரப்பாது தெரிந்த நபர்களை பதில் கடமைக்காக நியமித்து மேலதிக படி வழங்கக் காரணம் தனிப்பட்ட ரீதியில் தெரிந்தவர்கள் என்ற ரீதியிலா ?

ஊ. இப் பதில் கடமைகளை மேற்கொள்ளப்படுவதை நிறுத்தி அப் பதவிகளுக்கு தாபனத்தில் உள்ள தகைமை உள்ளவர்களை அல்லது வெளி நபர்களை ஏன் ஆட்சேர்க்கவில்லை ?

எ. இரண்டு பதவிகளிலும் வேலை செய்யும் போது வினைத்திரனாக அவ் விடயங்களை மேற்கொள்வது கஷ்டமாகும் என்பதையும் இதன் மூலம் மக்களுக்கு ஒழுங்கான சேவை ஒன்றினை வழங்க முடியாது என்பதனையும் நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஏ. நட்டம் ஏற்பட்டு மற்றும் மத்திய அரசிடம் இருந்து படியினைப் பெற்று பயணத்தில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச் சபையின் சேவைகளை விட அதிக எண்ணிக்கையான பஸ் வண்டிகளை தங்களது செலவில் எல்லா விடயங்களையும் மேற்கொள்ளும் அரசுக்கு வருமானம் ஒன்றினைப் பெற்றுக் கொடுத்து பயணத்தில் ஈடுபடுத்தும் தனியார் பஸ் வண்டிகளைப் பயணத்தில் ஈடுபடுத்துபவர்களுக்கு மிகவும் சிறந்த சேவை ஒன்றினை பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்ற முறையில் உங்கள் அமைச்சில் காணப்படும் பலவீனம் / குறையாடுகளை திருத்துவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா ?

ஐ. இல்லையாயின் ஏன் ?

## VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

## VII. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்

## VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## IX. பொது நடவடிக்கை

**01.** **கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சர் (மே.மா)**

**பிரேரணை :**

**கொழும்பு மாநகர சபையின் அதிகார பிரதேசத்தினுள்**
**வாகனங்களை தரித்து வைத்தல் தொடர்பான துணை விதிகள்**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சுூறப்பட வேண்டிய 252 ஆவது அத்தியாயமான மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 268 ஆவது பிரிவின் கீழ் மேல் மாகாணத்தின் முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, பொறியியல் சேவை, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு இணங்க அங்கீகரிக்கப்பட்ட.

கொழும்பு மாநகர சபையினால், 252 அதிகாரமான மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 267 ஆவது பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட கொழும்பு மாநகர எல்லையுள் வாகனங்களை நிறுத்துதல், நிறுத்தலைத் தடை செய்தல், தரித்தலுக்கான இடங்களை ஏற்படுத்தல் மற்றும் வீதி முறைக்கு உட்படுத்துதல், கட்டணம் அறவிடல், மீறுவோரைக் கவனித்து ஆவன செய்தல், போன்றவற்றிற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான கொண்டுவரப்படும் கொழும்பு மாநகர சபையின் அதிகார பிரதேசத்தினுள் "வாகனங்களை தரித்து வைத்தல் தொடர்பான துணை விதிகள்" என்ற பெயர் கொண்ட துணை விதிகள்

மேற்சுூறப்பட்ட 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சுூறப்பட வேண்டிய 252 ஆவது அத்தியாயமான மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 268 ஆவது பிரிவின் கீழ் அங்கீகரிக்க வேண்டும் என இம் மேல் மாகாண சபை பிரேரணை தெரிவிக்கின்றது. என்ற பிரேரணையை மேற்கொண்டு அத் துணை விதிகள் இம் மாகாண சபைக்கு 2017.04.04 ஆந் திகதி முன்வைக்கப்பட்டதுடன்,

அதன் பின், அங்கு எடுக்கப்பட்ட முடிவிற்கு இணங்க 2017.04.18, 2017.04.25 மற்றும் 2017.04.26 ஆகிய தினங்களில் நடைபெற்ற சட்ட நியதிச் சட்ட செயற்குழுவில் அது தொடர்பாக மேலும் கலந்துரையாடப்பட்டு அத் துணை யாப்பின் எல்லா பிரிவுகளையும் திருத்துவதற்கும் மற்றும் புதிய பிரிவுகளை உள்ளடக்குவதற்கும் சிபாரிசு செய்யப்பட்டதுடன், அந்த எல்லா சிபாரிசுகளையும்

திருத்தங்களாக உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட திருத்திய துணை விதிகளின் பிரதி ஒன்றினை இணைப்பு ஒன்றாக இச் சட்ட நியதிச்சட்ட செயற்குழுவின் அறிக்கையுடன் 2017.05.23 ஆந் திகதி இம் மாகாண சபைக்கு முன்வைக்கப்பட்டுள்ள படியால் முன்னர் கூறப்பட்ட துணை யாப்பு தொடர்பாக கிடைக்கப்பெற்ற செயற்குழுவின் சிபாரிசுகள் தொடர்பாகவும் கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## X. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

### 01. கௌரவ கித்சிறி கஹடபிடிய அவர்கள்

உலகமயமாக்கத்தினுள் ஒருங்கிணைந்த நாட்டினுள் சர்வதேச தொடர்புகளைப் பேணி நாட்டின் எதிர்காலத்தை பாதுகாப்பதற்கு மேன்மைதங்கிய ஜனாதிபதியும் கௌரவ பிரதம மந்திரியும் ஒன்று சேர்ந்து நல்லாட்சி அரசு ஒன்றை உருவாக்கி நாட்டின், மக்களுக்காக மேற்கொள்ளும் பணியிற்கு மேல் மாகாண மாகாண சபை தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது. **(பி/vi(1)16/03)**

{ 2017.03.21 ஆந் திகதி சபைக் கூட்டத்துடன் தொடர்புடையது }

### 02. கௌரவ பீ.டி.அபேரத்ன அவர்கள்

களுத்துறை மாவட்டத்தின் அகலவத்தை தேர்தல் தொகுதியின், அகலவத்தை பிரதேச செயலாளர் பிரிவின் ரத்மலே கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள "தம்பதொல அல்ல" உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தொடர்ச்சியாக வரும் மிகவும் அழகான சுற்றாடல் ஒனறில் காணப்படும் நீர்வீழ்ச்சி ஒன்றாகும்.

இவ் இடத்திற்கு உல்லாசப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளை வழங்கி, அபிவிருத்தி செய்து மேல் மாகாண சுற்றுலாத் துறை அமைச்சின் கீழ் பேணிச் செல்ல வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை கருதுகின்றது. **(பி/vi(1)16/04)**

### 03. கௌரவ லலித் எல்லாவல அவர்கள்

மேல் மாகாணத்தினுள் பதிவு செய்துள்ள முன்பள்ளி அபிவிருத்தி நிலையங்களுக்கு மேலதிகமாக ஒழுங்கற்ற முறையில் நடாத்தப்படும் முன்பள்ளிகளை ஒழுங்குபடுத்தி பதிவு செய்யுமாறும் இது தொடர்பாக விஷேட அறிவுள்ள ஒழுங்கான ஆலோசனைக் குழுவொன்றை நியமிக்குமாறும் பதிவு செய்யப்பட்டுள்ள முன் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு மாதாந்தம் ரூபா 5000/- படி ஒன்றினை செலுத்த நடவடிக்கை எடுக்குமாறும் இந்த மேல் மாகாண மாகாண சபை கருதுகின்றது. **(பி/vi(1)17/01)**

## XI. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2017.05.24 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.